**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : ரோஷ்ணா காசிம்**

**நாள்: 11.08.2024 நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

விவசாயத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இல்லம் தோறும் தேசிய கொடி ஏற்றும் இயக்கத்தில் நாடு முழுவதும் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதன் இன்று வில்லியனூர் அருகே உள்ள ஊசுட்டேரியில் ஆய்வு மேற்கொண்டார்.

பாரம்பரிய காய், கனி, விதை, மற்றும் உணவு திருவிழாவை முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று புதுச்சேரியில் தொடக்கி வைத்தார்.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டி வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் இன்று நிறைவடைகிறது.

முர்மு (8)

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவிற்கு திமோர் லெஸ்டே நாட்டின் உயரிய விருதான கிராண்ட் காலர் ஆப் தி ஆர்டர் ஆப் திமோர் லேஸ்டே வழங்கி அங்கீகரித்திருப்பது குறித்து, பெருமிதம் கொள்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார். மேலும், இவ்விருது இரு நாடுகளுக்கும் இடையேயான, வலுவான உறவுகளையும், பரஸ்பர மரியாதையையும் பிரதிபலிப்பதாகவும், பல ஆண்டுகளாக திருமதி முர்மு ஆற்றிய மகத்தான சேவைக்கு கிடைத்த அங்கீகாரமாகவும் கருதப்படுவதாக பதிவிட்டுள்ளார்.

மோடி 1(18)

இயற்கை விவசாயத்தின் நன்மை மற்றும் அதன் மீது சாமானியர்களின் நம்பிக்கை அதிகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் 109 அதிக விளைச்சல் தரும், தட்ப வெப்ப நிலையை தாங்கக் கூடிய, மற்றும் உயிரி வலுவூட்டப்பட்ட பயிர் வகைகளை வெளியிட்டார். இதில் 34 வயல் பயிர் வகைகள், 27 தோட்டக் கலை பயிர்கள் அடங்கும். வயல் பயிர்களில் தினை, தீவணப் பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள், கரும்பு, பருத்தி, நார் உள்ளிட்ட பல்வேறு வகையான விதைகள் வெளியிடப்பட்டன. தோட்டக்கலை பயிர்களில் பல்வேறு வகையான பழங்கள், காய்கறிகள், கிழங்குகள், மசாலா பொருட்கள், பூக்கள் மற்றும் மருத்துவ தாவரங்கள் அடங்கும். இந்நிகழ்ச்சியில் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளுடன் பிரதமர் கலந்துரையாடினார். இந்த புதிய பயிர் வகைகளின்

முக்கியத்துவம் குறித்து விவாதித்த பிரதமர், விவசாயத்தில் புத்தாக்கத்தை வலியுறுத்தினார். இந்த புதிய ரகங்கள் விவசாயிகளின் உற்பத்தி செலவை குறைக்க உதவுவதுடன், சுற்றுச்சுழலுக்கும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று விவசாயிகளிடம் அவர் தெரிவித்தார். இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளை விவசாயிகள் இந்நிகழ்ச்சியில் பாராட்டி

மோடி 2(13)

பேசினர். வேளாண் அறிவியல் மையம் ஒவ்வொரு மாதமும் உருவாக்கப்படும் புதிய பயிர் ரகங்களின் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வை அதிகரிக்க செய்ய வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார். மேலும், இந்த புதிய பயிர் வகைகளை உருவாக்கிய விஞ்ஞானிகளையும் பிரதமர் இந்நிகழ்ச்சியில் பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான், செய்தியாளர்களிடம் பேசுகையில், விவசாயிகளுக்கு இன்று ஒரு

வரலாற்று சிறப்பு மிக்க நாள் என்றும், வெளியிடப்பட்ட 109 பயிர் வகைகளில், 65 பயிர் வகைகள் விவசாயிகளின் வருமானம் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கவும், செலவுகளை குறைக்கவும் உதவும் என்றார். மேலும், இந்த பயிர் விதைகள் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றவையாகவும், எல்லா கால நிலையிலும், நல்ல விளைச்சலை தரக் கூடியவை என்றும், இந்த ரகங்கள் ஊட்டச் சத்து நிறைந்தவை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

*ஹர் கர் திரங்கா* (9)

இல்லம் தோறும் தேசிய கொடி ஏற்றும் இயக்கத்தில் நாடு முழுவதும் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர். இந்த இயக்கத்தின் ஒரு பகுதியாக இன்று உத்திரபிரதேச மாநிலத்தின் 403 சட்டமன்ற தொகுதிகளிலும் மூவர்ண கொடி அணிவகுப்பு தொடங்கியது. செவ்வாய் கிழமை நிறைவடையும் இந்த அணிவகுப்பு மாநிலம் முழுவதும், தெச பக்தியின் செய்தியின் பரப்பும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த அணி

வகுப்பில் அம்மாநில பாஜக தலைவர் திரு பூபேந்திர சிங் சவுத்ரி, மாநில பொது செயலாளர் திரு தரம் பால் சிங், கட்சி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

*நட்வர் சிங்* (10)

முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர்சிங்கின் மறைவுக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் மற்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து திரு தன்கர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், நட்வர் சிங், வெளியுறவுத் துறை அமைச்சர் உட்பட பல்வேறு பதவிகளில் நாட்டிற்கு சேவை ஆற்றியவர் என்றும், அவர் ஒரு சிறந்த எழுத்தாளராகவும், புகழ் பெற்ற வரலாற்று ஆசிரியராகவும் சமூகத்திற்கு சிறந்த பங்களித்துள்ளதாகவும் பதிவிட்டுள்ளார். மேலும், பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில்,

அரசு தந்திரம் மற்றும் வெளியுறவு கொள்கை ஆகியவற்றில் நட்வர் சிங்கின் பங்களிப்புகள் என்றும் நினைவில் கொள்ளப்படும் என்று கூறியுள்ளார்.

*ராஜ்நாத் சிங்* (10)

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் அனந்த்நாக் மாவட்டத்திற்கு உட்பட்ட அஹ்லான் பகுதியில் நேற்று பயங்கரவாதிகளுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையே நடந்த மோதலில் 2 ராணுவ வீரர்கள் வீர மரணம் அடைந்தனர். மேலும், பொதுமக்களில் 2 பேர் காயம் அடைந்தனர். உயிர் தியாகம் செய்த 2 இந்திய ராணுவ வீரர்களின் துணிச்சல் மற்றும் அச்சமின்மையை நினைத்து பெருமிதம் கொள்வதாகவும், அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு தனது இரங்களை தெரிவித்துக் கொள்வதாகவும், மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். இந்த துயரமான

நேரத்தில், தேசம் அவர்களுடன் உறுதியாக நிற்பதாகவும் அவர் கூறினார்.

விக்ரம் (7)

இந்திய வெளியுறவுத் துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி, நேபாள வெளியுறவு செயலர் திருமதி சேவா லாம்சலின் அழைப்பின் பேரில் 2 நாள் பயணமாக இன்று நேபாளம் சென்றுள்ளார். இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் நேபாளம்-இந்தியா உறவுகள் குறித்தும், பரஸ்பர நலன்கள் மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான விஷயங்கள் குறித்தும் விவாதிக்கின்றனர். திரு மிஸ்ரி, நேபாள அரசாங்கத்தின் அதிகாரிகளை தனித்தனியாக சந்திப்புகளை நடத்தி, பின்னர் திங்கட்கிழமை இந்தியா திரும்ப உள்ளார்.

*நினைவு நாள்* (7)

செவாலியே செல்லான் நாயக்கரின் நினைவு நாள் புதுச்சேரி அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது. இதனையொட்டி புதுச்சேரி சட்டப்பேரவை வளாகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு ராஜவேலு, அரசு கொறடா திரு ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு பாஸ்கர் (எ) தட்சணாமூர்த்தி ஆகியோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

*துணை நிலை ஆளுநர்* (16)

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதன் இன்று காலை முதல்முறையாக வில்லியனூர் அருகே உள்ள ஊசுட்டேரியில் ஆய்வு மேற்கொண்டார். அவரை அமைச்சர் திரு. சாய் ஜெ சரவணன்குமார் வரவேற்றார். ஊசுட்டேரியை பார்வையிட்ட துணை நிலை ஆளுநரிடம் அமைச்சர் திரு சாய்

ஜெ சரவணன்குமார் ஏரியின் கொள்ளளவு, அதன் பரப்பளவு, பறவைகளின் வருகை மற்றும் ஏரியின் பழமையான வரலாறுகள் குறித்து விளக்கினார். இதனை தொடர்ந்து பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் திரு தீன தயாளன் ஏரியின் வரைபடம் மற்றும் தண்ணீர் வரும் வழிமுறைகள் குறித்து விளக்கினார். மேலும், இந்த ஏரியின் மூலம் சுற்றுவட்டார பகுதி பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் பயன் பெறுவது குறித்தும், இங்கிருந்து நகரப்பகுதிக்கு குடிநீர் எடுத்து செல்லப்படுவது குறித்தும் விளக்கினார்.

இந்த ஆய்வின்போது பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் திரு வீரச்செல்வன், செயற்பொறியாளர் திரு ராதாகிருஷ்ணன், கொம்யூன் பஞ்சாயத்து உதவி பொறியாளர் திரு திருநாவுக்கரசு உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.

*விதை திருவிழா* (16)

இயற்கை மற்றும் பாரம்பரிய உணவு நுகர்வோர் சங்கம் மற்றும் நம்மாழ்வார் இயற்கை உழவர் சாகுபடியாளர் சங்கம்

இணைந்து நடத்திய பாரம்பரிய காய், கனி, விதை, மற்றும் உணவு திருவிழா புதுச்சேரி தட்டாஞ்சாவடி மார்க்கெட் கமிட்டி வளாகத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட முதலமைச்சர் திரு ரங்கசாமி கண்காட்சியை தொடக்கி வைத்தார். இந்த திருவிழாவில் புதுச்சேரி மற்றும் அருகில் உள்ள தமிழக பகுதிகளைச் சார்ந்த இயற்கை விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் விளைந்த காய்,கனி விதை மற்றும் இயற்கை உணவு தானியம் நேரடி விற்பனை செய்யும் வகையில் 80 அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றிலும் இயற்கையாக விளைவிக்க பட்ட பாரம்பரிய அரிசி வகைகள், கேழ்வரகு, கம்பு, மக்காசோளம், உள்ளிட்ட சிறுதானியம் பழ வகைகள், காய்கறிகள், மரக்கன்றுகள் விதைகள், பல்வேறு வகையான இயற்கை மூலிகை பொருட்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டு இருந்தது. இன்று ஒரு நாள் நடைபெற்ற இந்த உணவு திருவிழாவில் தமிழகம் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.

ஒலிம்பிக் (11)

பாரீஸ் ஒலிம்பிக் போட்டி வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் இன்று நிறைவடைகிறது. இந்திய நேரப்படி, இன்றிரவு 12.30 மணிக்கு விழா தொடங்குகிறது. இந்தியாவின் தேசிய கொடியை மனுபாக்கரும், ஸ்ரீஜெஷ் ஆகியோர் ஏந்தி செல்கின்றனர். ஒலிம்பிக் போட்டியில் 39 தங்கம் உட்பட 90 பதக்கங்களுடன் சீனா முதலிடத்திலும், 38 தங்கப் பதக்கம் உட்பட 122 பதக்கங்களுடன் அமெரிக்கா 2 ஆவது இடத்திலும், 18 தங்கம் உட்பட 50 பதக்கங்களுடன் ஆஸ்திரேலியா 3 ஆவது இடத்திலும் உள்ளன. இந்தியா 1 வெள்ளி, 5 வெண்கல பதங்கங்களுடன் 71 ஆவது இடத்தில் உள்ளது.

பிந்த்ரா (8)

சர்வதேச ஒலிம்பிக் குழுமத்தின் உயரிய விருது இந்தியாவின் அபிநவ் பிந்த்ராவிற்கு நேற்று வழங்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டில் நடைபெற்ற பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டியில்

ஆண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் போட்டியில் இந்தியா முதல் தனி நபர் ஒலிம்பிக் தங்க பதக்கத்தை அபிநவ் பிந்த்ரா வென்றவர் என்பது குறிப்பிடத் தக்கது. 150 க்கும் மேற்பட்ட தனிப்பட்ட பதக்கங்களை உள்ளடக்கிய புகழ் பெற்ற விளையாட்டு வீரர்களில் இந்தியாவின் பிந்த்ரா முக்கிய நபராக கருதப்படுகிறார். ஒலிம்பிக் இயக்கத்திற்கு அவர் அளித்த அளப்பறிய பங்கிற்காக இவ்விருது வழங்கப் பட்டுள்ளது.

நீட் (6)

மருத்துவ முதுநிலை சேர்க்கைக்கான நீட் நுழைவுத் தேர்வு இன்று நடைபெற்றது. மருத்துவ அறிவியலுக்கான தேசிய தேர்வு வாரியம் இத்தேர்வை நடத்தி வருகிறது. 2 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் இத் தேர்வில் பங்கேற்றனர். ஜூன் மாதம் நடைபெற விருந்த இத்தேர்வு, தேர்வு முகமையின் நேர்மை குறித்து எழுந்த குற்றச்சாட்டுகளை அடுத்து ஒத்தி வைக்கப்பட்டு, இன்று நடத்தப்பட்டது.

வானிலை (8)

தமிழகப் பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று முதல் வரும் 17 ஆம் தேதி வரை தமிழகத்தின் அநேக இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய, லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென் தமிழக கடலோர பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய, குமரி கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 35 முதல், 45 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.